
# பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் உங்களுக்கு உரிமை உண்டு!

சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான நட்பு மொழியில்
சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு வழிகாட்டிகள்



SOS CHILDREN'S VILLAGES

# உள்ளடக்கம்


1 பராமரிப்புக்கும் பாதுகாப்புக்குமான உங்கள் உரிமை 3


2 நீங்கள் மற்றும் உங்கள் பெற்றோர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தால் என்னவாகும் 8

3 நீங்கள் உங்கள் பெற்றோருடன் வாழ முடியாது போனால் என்னவாகும் 11


4 நீங்கள் தனியாக உங்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியில் இருந்தால் என்னவாகும் 26

5 உங்கள் நாட்டில் அவசரகாலம் இருந்தால் என்னவாகும் 29


## மரபு




சிறுவர் மற்றுமம் இளம் மக்கள்



பெற்றோர்




பராமரிப்பாளர்கள்



அரசாங்க அலுவலகர்கள்

அத்தியாயம் 1

# பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கான உங்கள் உரிமை




## பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்றால் என்ன?

பெரும்பாலான நாடுகள் போன்று நீங்கள் வயதானவர்கள் என்னும் 18 வயதை அடையும் வரை – சட்டத்தின் படி சிறுவர்கள் என நீங்கள் கருதப்படுகின்றீர்கள், அத்துடன் இது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை என்ற விசேட உரிமையை உங்களுக்கு கொடுக்கின்றது.

அதாவது அரசாங்கம் மற்றும் உங்களை சுற்றியுள்ள வயதுவந்தவர்கள், நீங்கள் வலுவாகவும் மற்றும் ஆரோக்கியமாகவும் இருக்கும் வண்ணம் வளருவதற்கான எல்லாவற்றையும் செய்ய வேண்டும், என்பது கருத்தாகும்.

இது உங்கள் உரிமை, அதை நீங்கள் சம்பாதிக்க வேண்டியது இல்லை என்பது அதன் கருத்து ஆகும். நீங்கள் இந்த உரிமையை கொண்டிருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது, மற்றும் ஒவ்வொருவரும் அதை மதிக்க வேண்டும்.



## என்னுடைய பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் யார் பொறுப்பு?

நீங்கள் ஒரு சிறுவராக இருக்கும் போது, கடைசி ஒரு வயதுவந்தவர் எப்போதும் உங்கள் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்: நீங்கள் நம்பக்கூடிய யாராவது ஒருவர், நீங்கள் சுதந்திரமான இளம் பருவமடைந்தவராக வரும் வரை உங்களுக்கு தேவையான எல்லா ஆதரவையும் வழிகாட்டலையும் கொடுப்பவர்.

பொதுவாக பெற்றோரே இதற்கு பொறுப்பானவர்கள். ஆனாலும் சில சந்தர்பங்களில், பெற்றோர் இந்த ஆதரவை வழங்க இருப்பதில்லை, உதாரணமாக, ஒருவர் அல்லது இருவருக்கும் தீவிரமான பிரச்சனை காரணமாக அவர்களின் பிள்ளைகளை நன்றாக நடத்தவில்லை, அல்லது இறந்து இருப்பார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில், குடும்பத்தில் உள்ள இன்னொரு வயதுவந்தவர் பெற்றோரின் பொறுப்பை ஏற்க கூடியவராக இருப்பார்.

.

இது மூத்த சகோதரர் அல்லது சகோதரி, மாமி அல்லது மாமா, உங்கள் பாட்டா பாட்டி அல்லது வேறு நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களாக இருக்கலாம்.

.

உங்கள் குடும்பத்தில் உங்களை பராமரிக்க ஒருவரும் இல்லை என்றால், வயதுவந்த அத்தகைய மற்றவர்கள் உள்ளனர் – உதாரணமாக, சிறுவர் பராமரிப்பில் அனுபவம் உள்ளவரும் மற்றும் நீங்கள், உங்களை பராமரிக்ககூடியவராகவும் சொந்தமாக வாழ முடிந்தவராகவும் வரும் வரை உங்களுக்கு உதவுவராக இருப்பார்.

## பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் எனக்கு குறைவு ஏற்பட்டால் என்னவாகும்?

பெற்றோரினால் அவர்களின் சிறுவர்களுக்கு, குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்க உறுதி அழிக்க முடியாத போது, இச் சிறுவர்களை பராமரித்துக்கொள்ள குறைந்தது மற்றுமொரு வயதுவந்தவர் மூலம் அரசாங்கம் வழிவகுக்க வேண்டும். இது "சிறுவர்களின் மாற்று பராமரிப்பு" என அழைக்கப்படும்

பெற்றோருடன் வாழ முடியாத சிறுவர்களுக்கு, உதவ என்ன செய்ய வேண்டும் என்பதை விபரிக்கும் "சிறுவருக்கான மாற்று பராமரிப்புக்கான வழிகாட்டல்" என்று ஒரு ஆவணம் உண்டு. பெற்றோர் தங்களுடைய பிரச்சனைகளை தீர்க்க எவ்வாறு உதவ வேண்டும், என்பதும் இதில் விபரிக்கப்பட்டுள்ளது, அப்போது அவர்கள் தங்கள் சிறுவர்களை மீண்டும் பராமரிக்க முடியும்.

சிறுவர்கள் யாராக இருந்தால் என்ன, அவர்கள் எங்கு வாழ்ந்தால் என்ன, அவர்கள் எங்கிருந்து வந்தால் என்ன, என்ன பாஷை கதைத்தால் என்ன, அவர்கள் மதம் என்னவாக இருந்தால் என்ன, அவர்களின் திறமைகள் என்னவாக இருந்தால் என்ன, அல்லது அவர்கள் என்ன பாலை சேர்ந்தவரானால் என்ன, "சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்புக்கான வழிகாட்டிகள்" எல்லா சிறுவர்களுக்கும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு உதவும்.



அத்தியாயம் 2

# நீங்கள் மற்றும் உங்கள் பெற்றோர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தால் என்னவாகும்



# எனது பெற்றோர் என்னை பராமரிக்க ஆதரவு பெறலாமா?

சில வேளைகளில் பெற்றோருக்கு பாரதூரமான பிரச்சனைகள் இருப்பதன் காரணமாக தமது சிறுவர்களை பராமரிப்பது கஷ்டமாக இருக்கும்.

உதாரணமாக, கடுமையான நோய்வாய்ப்பட்ட பெற்றோர் உள்ளார்கள், அல்லது மதுபானம் அல்லது போதைவஸ்துக்குள்ளானோர், வறுமையில் உள்ளவரும் அவருக்கு உதவி செய்ய எவரும் இல்லை.

இப்படியான சந்தர்ப்பங்களில், அரசாங்கம் மற்றும் நீங்கள் வாழும் சமூகத்திடமிருந்து, நீங்கள் மற்றும் உங்கள் பெற்றோர் ஆதரவை பெற்று பிரச்சனையிலிருந்து மீண்டு, ஒன்றாக நன்று வாழ முடியும். உதாரணமாக – அத்தகைய ஆதரவானது, குடும்ப ஆலோசனை, பயிற்சி மற்றும் சுகாதார பராமரிப்பில் விசேடத்துவம்.



# நான் எனது பெற்றோருடன் வாழ்வது எனக்கு சிறந்ததில்லை என்றால் என்ன நடக்கும்?

நீங்கள் பாதுகாப்பு, அன்பு மற்றும் ஆதரவை உணரும் குடும்ப சூழலில் வளர வேண்டும். அப்படி இல்லாத சந்தர்ப்பங்களில், உங்களை கவனிக்கவும் பாதுகாக்கவும், பெற்றோருக்கு ஆதரவை அரசாங்கம் கட்டாயம் கொடுக்க வேண்டும்.


இது இன்னும் உதவாத சந்தர்ப்பங்களில், உங்களின் சிறந்த நலனுக்காக, பெற்றோருக்குப் பதிலாக, ஒருவர் உங்களை பராமரித்து, உங்களுக்கு தீமையை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களிலிருந்து உங்களை பாதுகாக்க வேண்டியது கட்டாயமாக அவசியமாகின்றது.

உங்களின் கருத்தை அறிந்த பின், பெற்றோர் மற்றும் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்களின் கருத்தை அறிந்த பின்னர் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் அல்லது நீதிபதியினால் மட்டும் இதற்கான முடிவை எடுக்க முடியும்.



அத்தியாயம் 3

# நீங்கள் உங்கள் பெற்றோருடன் வசிக்க முடியாது போனால் என்னவாகும்



## தற்போது நான் எங்கு போவது?

உங்களுடைய பெற்றோருடன் உங்களுக்கு, வாழ முடியாது போனால், அரசாங்கம் உங்களுக்கு மாற்றுப் பராமரிப்பை வழங்க வேண்டும்: ஒரு புதிய இடம், உங்களுக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் வழங்கக்கூடிய உங்களுக்கு நம்பிக்கையான ஒருவருடன் வாழுதல்.

நீங்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதற்கு வித்தியாசமான விருப்பங்கள் இருத்தல் வேண்டும், உங்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சிறந்ததை தேர்ந்தெடுத்தல்.

உதாரணமாக நீங்கள் உறவினர் அல்லது நண்பர்களுடன் அல்லது உங்களை கவனிக்க விரும்பும் உங்கள் சமூகத்தில் உள்ள மற்றொரு குடும்பத்துடன் வாழலாம் அல்லது சிறுவர் பராமரிப்பில் அனுபவம் உள்ள வயதுவந்தவர், ஒரு இடத்தில் உங்களின் ஒத்த சூழ்நிலையில் உள்ள மற்றைய சிறுவர்களுடன் உங்களை பராமரிப்பார்.

நீங்கள் எங்கு சென்றாலும், உங்களுக்கு தேவையான காலம் வரை உங்களுக்கு தேவையான பராமரிப்பையும் பாதுகாப்பையும் நீங்கள் பெறுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

## என்னுடைய வாழ்க்கை புதிய இடத்தில் எவ்வாறு இருக்கும்?

புதிய இடம் உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு பதில் அளிக்க வேண்டும் அத்துடன் இயன்றளவு நீங்கள் வசித்த இடத்திற்கு அண்மையாக இருத்தல், அப்போது உங்கள் வாழ்வை இயன்றளவு குறைந்த மாற்றங்களுடன் தொடரலாம். மற்றும் இது உங்களுக்கு

நன்றாக இருந்தால், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் தொடர்பில் இருக்கலாம்.

புது இடத்தில் நீங்கள் பாதுகாப்பாக இருப்பதுடன் உங்களுக்கு போதிய அளவு உணவு, வீட்டு வசதி மற்றும் உங்கள் வாழ்க்கைக்கு அவசியமானமற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

அங்கே உங்களை பராமரிப்பவர்கள், உங்களுக்கு தேவையான போது, உங்களுக்கு வழிகாட்டி மற்றும் ஆதரவு அளித்து, உங்கள் உடலுக்கும் மனத்திற்கும் தேவையான சுகாதார பராமரிப்பு, அளித்து மற்றும் நிஜ வாழ்க்கையினை பற்றி கற்பதற்கு அல்லது அறிவதற்கு உதவுவதுடன், உங்கள் சமூக வாழ்கையில் உங்கள் பங்கை ஊக்குவிக்க வேண்டும்.




## நான் எனது பெற்றோருடன் வசிக்காவிட்டால், எனக்கு மற்றைய சிறுவர்கள் போன்று உரிமைகள் உண்டா?

ஆம். உலகத்தில் உள்ள ஒவ்வொரு சிறுவருக்கும், சட்டத்தின் கீழ் ஒரே உரிமைகள், அவை சிறுவர்கள் உரிமைகள் என்று அழைக்கப்படும்.

இவ்வுரிமைகளுக்கான சில உதாரணங்கள்: பாதுகாப்பான உணவும் நீர், வீடு, கல்வி, சுகாதார பராமரிப்பு, வன்முறையிலிருந்து பாதுகாப்பு, சிறுவர்களுடன் விளையாடுவதற்கான ஓய்வு நேர செயற்பாடுகள், உங்கள் கருத்தை கூறி அதை செவிமடுத்தல் மற்றும் உங்கள் மதம், மொழி, மற்றும் கலாசாரத்தை பின்பற்றல்.

நீங்கள் உங்கள் பெற்றோருடன் வாழவில்லை என்பதற்காக, எவரும் இந்த உரிமைகளை உங்களுக்கு மறுக்க முடியாது. இவ்வுரிமைகள் பற்றிய முழுப்பட்டியல் “சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம்” என்னும் ஆவணத்தில் உண்டு.

உங்களுக்கு விஸ்வாசமான நம்பும் வயதுவந்தவரிடம், இதைப்பற்றி மேலதிக விபரங்கள் கேட்டலாம். - உதாரணத்திற்கு, உங்களை பராமரிப்பவர், ஒரு உறவினர் அல்லது ஒரு ஆசிரியர்.



# நான் எனது வாழ்கை பற்றிய முடிவுகளில் பங்குபற்றலாமா?

ஆம். உங்கள் வாழ்க்கையின் எல்லா முடிவுகள் மற்றும் உங்கள் கருத்துக்களை கேட்டு தீவிரமாக கருதுவதற்கு அவற்றை பற்றி உங்களுக்கு அறிவிப்பதற்கும் உங்கள் கருத்தை சொல்வதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு.

உதாரணமாக, எந்த பாடசாலைக்கு செல்ல வேண்டும், உங்கள் சுகாதார பராமரிப்பு, நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வாழலாமா அல்லது இது உங்களுக்கு நல்லது அல்ல, நீங்கள் தற்போது வசிக்கும் இடத்தில் இருக்கலாமா, மற்றும் உங்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்கள் போன்றவற்றின் தீர்மானங்களில் நீங்கள் ஒரு அங்கத்தவர்.

நீங்கள் வசிக்கும் இடத்தில் எவ்வாறு நடத்தப்படுகின்றீர்கள் என்ற கருத்து மற்றும் இதை எவ்வாறு உங்களுக்கும் அதே சூழ்நிலையில் உள்ள மற்றைய சிறுவர்களுக்கு மேம்படுத்த முடியும் என்பதையும் நீங்கள் வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.



## எனது சொந்த தேவைகளும் எண்ணங்களும் கருத்தில் கொள்ளப்படுமா?

ஆம், உங்கள் சொந்த தேவைகளும் எண்ணங்களும், உங்கள் வாழ்கை பற்றிய எந்தவொரு தீர்விற்கும் மையப்பகுதியாகும்.

இதனாலேயே, தனிப்பட்ட பராமரிப்பு திட்டம் ஒன்று உங்களுக்கு தேவை. இத்திட்டம் உங்கள் தேவைகள், உங்கள் தேவைகள் எவ்வாறு நிறைவேறும், அத்துடன் உங்கள் வாழ்கையின் எதிர்காலத்திற்கான எண்ணங்கள் மற்றும் விருப்பங்களையும் விவரிக்கும்.

உங்களை பராமரிப்பவர், இத்திட்டம் எழுதுவதில் உங்கள் பங்களிப்பிற்கு ஆதரவு அளிப்பதுடன் திட்டம் உங்களுக்கு நன்றாக வேலை செய்கின்றதா என ஒழுங்கான முறையில் (ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை. விரும்பத்தக்கது) சரிபார்த்து, ஒத்த நிலைக்கு கொண்டு வரவேண்டும்.

h



# என்னை பராமரிப்பவரிடமிருந்து நான் எதிர் பார்க்க வேண்டியது என்ன?


நீங்கள் உங்கள் பெற்றோருடன் வாழ முடியாத போது, அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவர், உங்கள் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பு வாய்ந்த நம்பிக்கைக்குரியவர். இந்த நபர் வழமையாக “பராமரிப்பாளர்” என அழைக்கப்படுவார்.

இந்த பராமரிப்பாளர், உங்களுக்கு போதிய உணவு மற்றும் வதிவிடம், கல்விக்காக ஊக்கம், மற்றும் நல்ல சுகாதாரம், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடான தொடர்பை எளிதாக்கல், மற்றும் உங்களை எந்தவித வன்முறையிலிருந்து அல்லது உங்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகளிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை வழங்க வேண்டும்.

உங்களுக்கு இந்த நபருடன் நேர்மறையான மற்றும் ஆதரவான உறவு முறை இருத்தல் வேண்டும். அப்போது, நீங்கள் சரலமாக பேச, ஆலோசனையை பெற மற்றும் நீங்கள் பிறருக்கு தெரியப்படுத்த விரும்பாததை, இவருடன் பகிர்ந்து கொள்ளவும் முடியும்,

உங்களுடைய உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட தேவைகள், உங்கள் பால், உங்கள் மத நம்பிக்கைகள் மற்றும் ஆன்மீக வாழ்கை மற்றும் உங்கள் வாழ்க்கை கதைக்கு மரியாதை இருக்க வேண்டும்.





## நான் எனது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் வசிக்க முடியுமா?

நீங்கள் மற்றும் உங்கள் உடன்பிறப்புக்கள், உங்கள் குடும்ப பராமரிப்பிலிருந்து வெளியில் இருக்கும் போது, நீங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் உடன்பிறப்புக்களுடன் ஒன்றாக இருத்தல் உங்களுக்கு நல்லது அல்ல என்பதை தவிர நீங்கள் உங்கள் உடன்பிறப்புக்களிலிருந்து பிரிதலை தடுக்க அரசாங்கம் மற்றும் சமூக சேவைகள், இயன்றளவு எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

## நான் எனது குடும்பத்தினருடன் தொடர்பு வைத்திருக்கலாமா?

உங்களுக்கு தீங்கு இல்லாத போது, எப்பொழுதெல்லாம் முடிகின்றதோ அப்போதெல்லாம் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் தொடர்பு வைக்க உங்களுக்கு ஆதரவு கிடைக்க வேண்டும்.

தொடர்பு வைக்கும் போது, நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்திற்குகான உங்கள் உறவு முன்னேற்றம் அடைந்து ஒரு நாள் மீண்டும் ஒன்றாக வாழ முடியும்.

நீங்கள் உங்கள் குடும்பத்துடன் தொடர்பு வைப்பதா மற்றும் எத்தனை முறை என்பது பற்றிய தீர்மானத்தில், நீங்கள் பங்குபற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் குடும்ப அங்கத்தவருடன் நேரடி தொடர்பில் இல்லாவிட்டால், அவர்கள் பற்றிய தகவல்களை நீங்கள் உங்களை பராமரிக்கும் வயதுவந்தவர்களிடமிருந்து பெற வேண்டும்.

## நான் எப்போது மட்டும் ஆதரவை பெறுவேன்?

உங்களுக்கு தேவையான காலம் மட்டும் - நீங்கள் உங்கள் பெற்றோருடன் மீண்டும் வாழும் வரை அல்லது நீங்கள் சுதந்திரமான இளம் வயதுவந்தவராக வாழும் வரை, உங்களை நன்றாக பராமரிப்பவர் ஒருவரை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

ஒரு அரசாங்க அலுவலகம் அல்லது நீதிபதி அவ்வப்போது உங்கள் நிலைமையை மதிப்பிட வேண்டும், அத்துடன் உங்களுக்கு கிடைக்கும் பராமரிப்பு உங்களுக்கு நன்றாக உள்ளதா அல்லது மாற்றங்கள் ஏதாவது செய்ய வேண்டுமா என தீர்மானிப்பர். இதைப்பற்றி அவர்கள் உங்கள் கருத்தை அறிந்து கவனித்தில் எடுத்து தீர்மானிக்க வேண்டும்.

## நான் எனது பெற்றோருடன் சென்று மீண்டும் வசிக்கலாமா?

உங்கள் பெற்றோர் அல்லது குடும்பத்தின் மற்றைய அங்கத்தவர்கள் உங்களை பராமரிக்கும் நிலை ஏற்பட்டவுடன் நீங்கள், உங்கள் குடும்பத்திற்கு திரும்பி செல்ல முடியும். இதனாலேயே, மீண்டும் நீங்கள் ஒன்றாக வாழ முடியுமா என தீர்மானிப்பதற்கு, ஒரு அரசாங்க அலுவலகம் அல்லது நீதிபதி உங்கள் நிலைமை மற்றும் உங்கள் பெற்றோரின் நிலைமை காலா காலத்துக்கு மதிப்பீடு செய்வதுடன் உங்கள் கருத்தையும் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்,

நீங்கள் மற்றும் உங்கள் பெற்றோரும், மீண்டும் ஒன்றாக வாழ தயாராக இருக்கும் போது, எப்போது மற்றும் எப்படி மீண்டும் ஒன்றாக இணைய முடியும் என்பது பற்றிய ஒரு தெளிவான திட்டம் தேவை. திட்டம் பற்றி உங்களுக்கு அறிவிப்பதுடன், தீர்வின் எல்லா மட்டங்களிலும் உங்கள் பங்களிப்பு இருத்தல் வேண்டும்.

நீங்கள் மீண்டும் உங்கள் பெற்றோருடன் வாழும் போது, நீங்கள் நன்றாக ஒருமித்து வாழலாம் என்பதை உறுதிப்படுத்த உங்களுக்கும், உங்கள் பெற்றோருக்கும் ஆதரவு தேவை.



# மற்றவர்கள் என்னை மோசமாக நடத்தினால் அல்லது காயப்படுத்தினால் என்ன நடக்கும்?

பாதுகாப்பான சூழலில் வாழ உங்களுக்கு உரிமை உண்டு. உங்களை உடல் ரீதியாக, பொருத்தமற்ற விதத்தில் தொட அல்லது உங்களை பாதிக்கும் வார்த்தைகளால் யாரும் உங்களைதவறாக நடத்தவோ அல்லது காயப்படுத்தவோ முடியாது.



இவ்வாறு நடந்தால் நீங்கள் நம்பும் வயதுவந்தவரிடம் சொல்ல வேண்டும். உதாரணமாக, உங்களை பராமரிப்பவர், ஒரு உறவினர் அல்லது ஆசிரியரிடம் உதவி பெறலாம். யாராவது உங்களை மோசமாக நடத்தினாலோ அல்லது காயப்படுத்தினாலோ நீங்கள் உதவி கோர செய்ய வேண்டியவை ஒவ்வொரு நாட்டிலும் பல உண்டு.

முக்கியமானவை: உங்கள் நாட்டின் சிறுவர் உதவித்தொடரை அழைக்கவும், காவல்துறைக்கு அழைக்கவும் அல்லது அருகாமையில் உள்ள காவல்துறைக்கு செல்லவும்: உங்கள் நாட்டில் உள்ள சிறுவருக்கான ஒம்பூட்ஸ்மனை (சிறுவர்கள் மற்றும் இளையவரின் உரிமைகளை பாதுகாக்கவும் மேம்படுத்துவதற்கு பொறுப்பான ஒரு அரசாங்க அமைப்பு) தொடர்பு கொள்ளவும்.

உங்களை அல்லது உங்கள் குடும்பத்தை அல்லது உங்கள் சமூகத்தை ஆதரிக்ககும் ஒரு நிறுவனம் இருப்பின், நீங்கள் நம்பும் ஒரு உத்தியோகஸ்தரிடம் உதவி கேட்கலாம். (பொதுவாக இவர் “சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்”)

# எனது அந்தரங்கம் எனக்கு இருக்குமா?

உங்கள் உடல், இடம், உடைமைகள் மற்றும் நீங்கள் பாதுகாக்க விரும்பும் தகவல்கள் போன்றவற்றை நீங்கள் யார் அணுகலாம் என்பதை கட்டுப்படுத்தல் உங்கள் அந்தரங்கம் ஆகும்.

நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வசிக்கும் போதும் அவ்வாறு இல்லாத போதும், உங்களுக்கு அந்நரங்கம் தேவை.

நீங்கள் உங்கள் பெற்றோருடன் வசிக்காத போதும், உங்கள் சொந்த சுகாதார மற்றும் உடல் பராமரிப்பு உற்பட உங்களுக்கு தனிமை தேவைப்படும் போதும், செல்லதற்கு ஒரு தனிப்பட்ட இடம் தேவை.

அத்துடன் உங்களுக்கு பாதுகாப்பு என்று கருதும் பொருட்களை வைப்பதற்கும், உங்கள் சொந்த பொருட்களை பாதுகாப்பாக சேகரிக்கவும் ஒரு இடம் தேவை.



## நான் எனது வாழ்க்கை சரித்திரத்தை அறிய அனுமதி உண்டா?

ஆம். உங்கள் வாழ்க்கை சரித்திரம், உங்கள் அடையாளத்தின் ஒரு பகுதியாகும். இதுவே, நீங்கள் யார் என்றும் உங்களை மற்றைய எல்லா மக்களிடமிருந்து வேறுபடுத்துகின்றது. உங்களுக்கு தேவையான ஆதரவைப் பெற, உங்கள் பெயர், தகப்பன் பெயர், பிறந்த திகதி மற்றும் எல்லா அடிப்படை விவரங்கள் உடைய ஆவணங்களை நீங்களை வைத்திருத்தல் வேண்டும்.

உங்களுடைய பரம்பரை, உங்கள் குடும்பம், உங்களுடைய தற்போதைய நிலை மற்றும் உங்கள் வாழ்க்கை திட்டம் பற்றி உங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கை சரித்திரத்தை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உங்கள் பராமரிப்பாளரினால் உங்களுக்கு உதவ முடியும். உதாரணமாக, புகைப்படங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கையின் வெவ்வேறு தருணங்களுக்கான மற்றைய நினைவுகளைக் கொண்ட ஒரு "வாழ்க்கை கதை புத்தகத்தை" வைத்திருக்கலாம்

## ஒரு நாளைக்கு நான் சொந்தமாக சென்று வசிக்கலாம் என்று கூறப்பட்டது. இது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும்?

நீங்கள் வயதுவந்தவர்- பெரும்பாலான நாடுகளில் 18 வயது, அடையும் போது – சட்டத்தின் கீழ் நீங்கள் ஒரு போதும் சிறுவராக கருதப்படமாட்டீர்கள் அத்துடன், நீங்கள் தயாரானால், சொந்தமாக சென்று நீங்கள் வசிக்கலாம்.

இதற்கு தயாராவதற்கு, சுதந்திரமாக வருவதற்கான சரியான ஆயத்தங்கள் மற்றும் எல்லா பொறுப்புகளுக்கு முகம் கொடுக்ககூடிய இளைய வயதுவந்தவராக நீங்கள் இருத்தல் வேண்டும்.

நீங்கள், உங்கள் குடும்பத்திற்கு வெளியில் வசிக்கும் போது, உங்களை பராமரிப்பவர்கள், இதில் உங்களுக்கு உதவ வேண்டும். நீங்கள் விரும்பும் ஒரு இளம் வயதுவந்தவராகி, மற்றும் நீங்கள் வளரும் போது சமுதாயத்தில் பங்குபற்ற, உங்கள் அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்த அவர்களுடன் சேர்ந்து நீங்கள் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.

நீங்கள் வயதுவந்தவராகும் முன்னரே, உங்கள் வயது, திறமைகள் மற்றும் தேவைகளுக்கு மதிப்பு அளித்து, இத்திட்டத்தை தயாராக்கும் நிலைகளுடன் நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

இத்திட்டம் நீங்கள் அவசியமான கல்வி மற்றும் தொழிலுக்கு தயாராவதற்கான பயிற்சி, சுகாதார பராமரிப்பு மற்றும் பிற சேவைகளை அணுகுதல், மற்றும் நீங்கள், உங்கள் சொந்தத்தில் வசிக்க தொடங்குவதற்கான நிதி ஆதரவு போன்றவற்றை பெறுதலை உறுதிப்படுத்த வேண்டும்.

நீங்கள் விசேட தேவையுள்ளவராயின், இயன்றளவு சுதந்திரமாக இருப்பதற்கு அவசியமான ஆதரவு மற்றும் எல்லா மற்ற இளைஞர்கள் போன்று வாழ்க்கையில் உங்கள் சமூகத்தில் பங்குபற்றல் போன்றவற்றை பெற வேண்டும்.



அத்தியாயம் 4

# உங்கள் சொந்த நாட்டிலிருந்து நீங்கள் வெளியில் இருந்தால் என்னவாகும்



## எனது சொந்த நாட்டிற்கு வெளியில் தனியாக இருக்கிறேன். என்னை பராமரிப்பது யார்?

நீங்கள் இருக்கும் நாடு, நீங்கள் வழமையாக வசிக்கும் நாடாக இல்லாவிட்டால், மற்றும் உங்களை பராமரிக்க உங்கள் பெற்றோர் அல்லது குடுப்ப அங்கத்தவர் இல்லாத போது, உங்களை பராமரிக்க வேறு ஒருவரை அந்த நாட்டு அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

நாட்டின் மற்றைய சிறுவர் போன்று அதே பாதுகாப்பு மற்றும் ஆதரவு உங்களுக்கு இருத்தல் வேண்டும் மற்றும் உங்கள் கருத்து, கலாசாரம், மதம், மொழி, சமூக மற்றும் இன பின்னணிக்கு மக்கள் மதிப்பு அளித்தல் வேண்டும்.



## எனது குடும்பத்துடன் நான் தொடர்பு கொள்ளலாமா?

உங்களை பாராமரிப்பவரும் அரசாங்கமும், உங்கள் நாட்டில் உள்ள உங்கள் பெற்றோர் அல்லது குடும்ப அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு உதவ வேண்டும் மற்றும் நீங்கள் அவர்களுடன் வசிப்பது சாத்தியமானதா மற்றும் நல்லதா என பார்க்க வேண்டும்.

## சர்வதேச பாதுகாப்பை நான் பெறலாமா?

போர் அல்லது வன்முறை போன்ற ஆபத்தினால் உங்கள் வாழ்க்கையிற்கு பயத்தின் காரணமாக, நீங்கள் நாட்டைவிட்டு வெளியேறினால், நீங்கள் சர்வதேசத்தின் உதவியை நாடலாம். (அத்துடன் புகலிடம் என்று அழைக்கப்படும்). சர்வதேச பாதுகாப்பை பெற, பல ஆவணங்களை காட்ட வேண்டும் அத்துடன் இதற்கு காலம் எடுக்கும்.

உங்களை பராமரிப்பவரும் அரசாங்கமும் இதற்கு உதவ வேண்டும். உங்கள் வாழ்க்கைக்கு மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து இருந்தால் அல்லது உங்களை பராமரிப்பதற்கு அங்கு வயதுவந்தவர் இல்லாவிட்டால், உங்கள் நாட்டிற்கு உங்களை திருப்பி அனுப்ப கூடாது.


## நான் தடுத்து வைக்கப்படலாமா?

நீங்கள் குற்றம் எதுவும் செய்யாமல், நீங்கள் இன்னொரு நாட்டிற்கு குடியேறியதற்காக மட்டும் உங்களை தடுத்து வைக்க முடியாது. அத்துடன் வயதுவந்தவர்கள், உங்களை சட்டத்திற்கு எதிராக ஏதாவதொன்றை செய்ய வற்புறுத்தினாலும் உங்களை தடுத்து வைக்க முடியாது.

`

அத்தியாயம் 5

# உங்கள் நாட்டில் அவசர காலம் இருந்தால் என்னவாகும்



## அவசரகாலம் என்றால் என்ன?

உங்கள் நாட்டில் அவசர காலம் என்பது, உதாரணமாக, யுத்தம், வெள்ளம், பூகம்பம் அல்லது அவ்வாறான பேரழிவு.

## அவசர காலத்தின் போது, என்னை பராமரிப்பதற்கு, எனது குடும்பத்திற்கு உதவி தேவைப்பட்டால்?

உணவு மற்றும் மருத்துவ உதவி, அத்துடன் உங்கள் வாழ்க்கைக்கான அடிப்படை சேவைகளை அணுகுதல், பாடசாலைக்கு செல்லுதல் அல்லது உங்கள் உணர்வுகளை கையாள தொழில்சார் நிபுணர்களின் ஆதரவு போன்றவற்றை, உங்கள் நாட்டில் அவசரகாலம் இருப்பினும் நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் பெறலாம்.

உங்களுக்கு விசேட மருத்துவ உதவி பெறுதல் அல்லது பாதுகாப்பாக இருத்தல் அவசியம் என்று இல்லாவிடில், அவசர காலம் காரணமாக, உங்களை குடும்பத்திலிருந்து பிரித்து வேறு நாட்டிற்கு அனுப்ப முடியாது, இத்தருணத்தில் உங்களுக்கு நம்பிக்கையுள்ள வயதுவந்தவர் உங்களுடன் வருதல் வேண்டும், அத்துடன் திரும்பி வருவதற்கான தெளிவான திட்டம் தேவை.

## எனது குடும்பம் அங்கு இல்லாவிடத்து எனக்கு உதவி செய்வது யார்?

அவசர நிலைமையின் போது நீங்கள் தனியாக இருந்தால், அவசரநிலையில் உங்களுக்கு உதவி செய்ய வரும் வயதுவந்தவர், முதலில் நீங்கள் யார் என்பதை அறிய உங்கள் அடையாளத்தை பதிவு செய்ய வேண்டும் (உங்கள் பெயர், நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் போன்றவை)

**இது உங்கள் தேவை என்ன, அத்துடன் நீங்கள் யார் மற்றும் உங்கள் குடும்ப அங்கதவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள உதவுவதுடன் நீங்கள் அவர்களுடன் மீண்டும் சேர்வதற்கு உதவும்,**

**உங்கள் பெற்றோரை அல்லது குடும்ப அங்கத்தவர்களை கண்டு பிடிக்கும் வரை அல்லது உங்கள் தேவைகளின் அடிப்படையில் ஒரு குடும்பத்தை கண்டுபிடிக்கும் வரை. குறுகிய காலத்திற்கு நம்பிக்கையான வேறொருவருடன் குறுகிய கால பராமரிப்புக்கு உங்களை அனுப்பலாம்.**



**இக் கையேட்டிற்கு பங்களித்த 500 சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கு விசேட நன்றிகள்.**

**சிறுவர்களுக்கான மாற்று பராமாப்பு வழிகாட்டியின் சட்டப்படியான மூலப்பிரதி ஐக்கிய நாடுகளின் இலத்திரனியல் நூலகத்தில் உண்டு.**

© 2019 சிறுவர் மற்றும் இளைஞர்கள் நட்புறவு எழுத்தாக்கம் சர்வதேச எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்கள் ப்பெரிகெற்றி லன்ட 50 - 54, 1200 வியனா, ஆஸ்திரிய

www.sos-childrensvillages.org

© 2019 வரைகலைகள் மற்றும் தளவமைப்பு Visuality.eu

SOS CHILDREN'S VILLAGES